கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில் 8-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள நேரடிக் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசாமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உற்பத்தியாகக் கூடிய நெல் அனைத்தையும் அரசே நேரடியாகக் கொள்முதல் நிலையங்கள் மூலமாகக் கொள்முதல் செய்கிறது. கிராமங்களில் கொள்முதல் செய்த நெல்லை வைப்பதற்குக் கட்டிடங்கள் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருப்பதால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எல்லா கொள்முதல் நிலையங்களுக்கும், அரசின் மூலமாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யப் படுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாக அரசாங்கம் நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மாணவர் விடுதி

* 6746—டாக்டர் பெ. துரைபாண்டியன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், மானாமதுரை தாலுகா, திருப்பாச்சேத்தி அரசு உயர்நிலைப் பள்ளிக்கு ஆதிதிராவிட மாணவர் விடுதி தொடங்கப்படுமா ?

9—55 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பரிசீலனையில் தற்போது இல்லை.

டாக்டர் பெ. துரைபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருப்பாச்சேத்தி கிராமத்திலிருக்கும் அரசு மேல்நிலைப் பள்ளி 1,310 மாணவ, மாணவிகளைப் படிக்க வைக்கக் கூடிய பள்ளியாகும். நான் அமைச்சர் அவர்களிடம் பேசும்போது கடந்த ஆண்டு இந்த ப்ரப்போஸல் வந்த பிறகு

அது நின்றுவிட்டது என்றும், இந்த ஆண்டு அவசியம் செய்து தாருங்கள் என்றும் கேட்டிருக்கிறேன். இந்தப் பள்ளி வைகை ஆற்றின் கரையில் இருக்கின்றது. தற்போது ஐந்தாறு வருடமாக தண்ணீர் வராமல் இருப்பதால் மாணவர்கள் போய் வரக் கஷ்டம் இல்லாமல் இருக்கிறது. ஆனால் வைகையில் வெள்ளம் வரும் காலத்தில் ஆற்றுக்கு அந்தப் பக்கம் இருப்பவர்கள் பள்ளிக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்டுக் கொண்டதை நினைவில் கொண்டு, இந்தக் கேள்வியையும் மனதில் கொண்டு இந்த ஆண்டே அதை முடித்துத் தருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று தக்க நடவடிக்கை எடுத்து அந்த மாணவர் விடுதி அமைக்க தக்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. துரைபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அமைத்துத் கொடுத்தால் எதிர் காலத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் சேர்த்து, மாண்புமிகு ஆதி திராவிட நல அமைச்சர் அவர்களையும் சேர்த்து, இந்தச் சிறுவன் படித்த அந்தப் பள்ளியின் காலத்தைப் பற்றிப் பேசும்போது இவர்களுடைய காலத்தில்தான் அந்த விடுதி வந்தது என்ற பெருமை நம் எல்லோருக்கும் கிடைக்கும் என்று கூறி அமைச்சரின் பதிலுக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விடையே பெறுகிறீர்களா ! (சிரிப்பு).

அரசினர் தோட்டம் அரசு மருத்துவமனையை விரிவாக்குதல்

* 2624—திரு. அ. இரகுமான்கான் :
மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள், ஊழியர்கள் வசிக்கும் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள அரசு மருத்துவமனையை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,